தமிழ்நாடு அரசு
கால்நடை பராமரிப்புத்துறை

சிவகங்கை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையில் கீழ்க்காணும் பதவிகளுக்கு தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை | இனச்சுழற்சி | கல்வி மற்றும் பிற தகுதிகள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆய்வக உடனாள் | 01 | பொதுப்பிரிவினா் முன்னுரிமை பெற்றவா் (GT –Priority) | 10-ம் வகுப்பு தேர்வு எழுதி மதிப்பெண் பட்டியல் பெற்றிருக்க வேண்டும் | Level-2, Rs.15900-50400/- |
| 2 | அலுவலக உதவியாளா் | 01 | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர)- முன்னுரிமை பெற்றவா் (BC(Except Muslims)-Priority) | 8-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். | Level-1, Rs.15700-50000/- |
| 3 | ஓட்டுநா் | 01 | தாழ்த்தப்பட்டோர் அருந்ததியனா் முன்னுரிமை பெற்றவா் (SCA- Women-Priority) | i) 8-ம் வகுப்பு தேர்ச்சி<br>ii)தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்<br>iii) ஓட்டுநா் உரிமம் நாளது தேதி வரை புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>iv) ஊா்தி ஓட்டுவதில் குறைந்தபட்சம் 2 வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். | Level-8, Rs.19500-62000/- |

1. விண்ணபதாரா் தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் வசிப்பதற்கான ஆதாரத்தின் நகலை இணைத்திட வேண்டும் (ஆதாா் அட்டை, ஓட்டுநா் உரிமம் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளா் அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்று)
2. காலிப்பணியிடங்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினா்கள் ஆகியோரின் விகிச்சாரத்தை உள்ளடக்கியதாகும்.
3. மேற்கண்ட மூன்று பதவிகளுக்கும் விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியா், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்பனா்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர்(முஸ்லீம்) 32 ஆகும், பொதுப்பிரிவனருக்கு 30 ஆகும். (01.07.2019 அன்றுள்ளபடி)
4. விண்ணப்பங்களை இலவசமாக 21.01.2020 முதல் 06.02.2020 பிற்பகல் வரை சிவகங்கை மாவட்ட ஆட்சியரக வளாகத்திலுள்ள கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநா் அலுவலகத்தில் அலுவலக பணி நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோா் சுயிவலாசமிட்ட ரூ.5/-க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய உறையுடன் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது விண்ணப்பங்களை சிவகங்கை மாவட்ட இணைய தளத்தில் www.sivaganga.tn.nic.in கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒரே விண்ணப்பதாரா் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **மண்டல இணை இயக்குநர் அலுவலகம், கால்நடை பராமரிப்புத்துறை, மாவட்ட ஆட்சியரக வளாகம், மருதுபாண்டியர் நகர், சிவகங்கை-630562** என்ற முகவரிக்கு 06.02.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிட வேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும்.
7. விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை மேல் உறையின் மீது பெரிய எழுத்துக்களில் தவறாது குறிப்பட வேண்டும்
8. மேற்கண்ட பதவிகளுக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். நேர்முகத்தேர்வினை எந்த நிலையிலும் நிறுத்துவதற்கும்/ரத்து செய்வதற்கும் சிவகங்கை மாவட்ட ஆட்சியருக்கு முழு அதிகாரம் உண்டு. நேர்முகத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்க்ள இன சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
9. மேல்குறிப்பிட்ட அனைத்து பதவிகளுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு 10 வருடம் உச்ச வயது வரம்பில் கூடுதலாக வழங்கப்படும்
10. ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி கல்லூரி படிப்பிற்கு குறைந்ததாக இருந்தால் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு விண்ணப்பதாரர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் எந்த சாதியை சார்நதவராக இருப்பினும் குறைந்த அளவு பொதுக்கல்வியை காட்டிலும், மெற்பட்ட பொதுக்கல்வி தகுதியை பெற்றவராய் இருந்து அல்லது கல்லூரிப் படிப்பு பட்டம் பெற்றிருந்து நியமிக்கப்படுவதற்கு மற்றபடி தகுதி உடையவராய் இருந்தால் நியமிக்கப்படுவதற்காக வயது வரம்பு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருநதால் அந்த வயது வரம்பு அவருக்கு பொருந்தாது.